பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 52

வெள்ளிக்கிழமை
17 ஜனவரி 2025

தை 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**விவசாயியின் மோ.சைக்கிள் மல்லாவியில் தீக்கிரை!**
» 15

# மன்னார் நீதிமன்றுக்கு முன்பாக இருவர் சுட்டுப் படுகொலை

## பட்டப்பகலில் பதறவைத்த சம்பவம்
## பழைய பகை கொலையில் முடிந்தது





**மன்னார், ஜனவரி 17**

**மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றையதினம் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில், அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.**
15

வெளிநாட்டு ஆசைகாட்டி

**ரூ.61 லட்சம் மோசடி மூன்று பேர் கைது!**
» 15

## ரி.ஐ.டி. என்று தெரிவித்து ரூ.30 லட்சம் கொள்ளை!

யாழ். நகர்ப் பகுதியிலுள்ள நகைக்கடையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள நகைக் கடைக்குள் அத்துமீறி நுழைந்த மூவர், 30 லட்சம் ரூபாவை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.
ஹைஏஸ் வாகனத்தில் வந்த மூவர், தங்களை
15

தினமும் 7 மணித்தியாலம்

## நெடுந்தீவில் மின்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் தினமும் 7 மணித்தியாலம் மின்வெட்டு நடை முறைப் படுத்தப்படுகின்றது என்று பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
15

**அதானி நிறுவனத்துக்கு எதிரான மனுவை விசாரிப்பதற்கு முடிவு**
» 15

**பட்டங்கள் பெற்றும் வீதியில் பட்டதாரிகள்**
யாழில் போராட்டம்
» 06

## பருத்தித்துறைக் கடலில் இன்று சன்னங்கள் சீறும்

மீனவர்கள் பிரவேசிக்கவேண்டாம்
கடற்படை நேற்று உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜன. 17
இலங்கைக் கடற்படையினர் பருத்தித்துறைக் கடற்பரப்பில் இன்று சூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளதால், மீனவர்களை அந்தப் பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாம்
15

## போலியான பத்திரத்தை வைத்திருந்தவர் கைது!



யாழ்ப்பாணம், ஜன. 17
சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக, போலியாகத் தயாரிக்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரம் வைத்திருந்த கனேடியப் பிரஜை ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது
15

**இரணைமடுவின் கீழுள்ள குடும்பங்கள் இடப்பெயர்வு**
» 12



முச்சந்தி முரளி

**'அவங்கள் சுட்டுப்போட்டு ஓடுமட்டும் பொலிஸ்காரர் புளியங்காயோ புடுங்கினவை?'**

## பொய்யான குற்றச்சாட்டுகளால் முடக்கமுடியாது பெரமுனவை!

நாமல் ராஜபக்ச ஆவேசம்

கொழும்பு, ஜன. 17
போலியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, சிறையில் அடைப்பதன்மூலம் எமது பயணத்தைத் தடுக்க முடியாது. மக்களுக்கான எமது வேலைத் திட்டம் தொடரும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர்
15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
15 EDITION
JITF 2025
13th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ். கோட்டைக்கு அருகில்)
இன்னும் 7 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுடனான ஒப்பந்தங்கள் வெளிப்படுத்தப்படவேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

**கொழும்பு, ஜன.17**

**ஜனாதிபதியின் சீனப் பயணத்தின்போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் சீனப் பயணத்தின்போது 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. அவை என்ன? இதனை எப்படி அறிவது? மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றம் மற்றும் நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்- என்றார். (ச-44)



# ரணில் — சஜித் சங்கமிக்க இருதரப்பிலும் குழுக்கள்

கொழும்பு, ஜன.17

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒரு கூட்டணியின்கீழ் ஒன்றிணைப்பதற்குரிய பேச்சுகளை முன்னெடுப்பதற்காக இரு தரப்புகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசீம், ஹர்சன ராஜகருண ஆகியோர் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன உள்ளிட்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருதரப்புகளுக்குமிடையில் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் ஏற்கனவே பேச்சுகள் ஆரம்பமாகி இருந்தாலும், அடுத்துவரும் நாள்களிலேயே உத்தியோகபூர்வ பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளன. (ச-44)

# பெப்ரவரி தொடக்கமே 'க்ளீன் ஸ்ரீலங்கா'

கொழும்பு, ஜன.17

'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் பெப்ரவரி முதலாம் திகதி முதலே நடைமுறைக்கு வரும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் தொடர்பில் தற்போது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுவருகின்றது.

பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்துதான் திட்டம் ஆரம்பமாகும்.

'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்துக்கு முடிவு கிடையாது. இலங்கை எல்லாத்துறைகளிலும் வளர்ச்சி அடைந்த பின்னரும் இந்தத் திட்டம் தொடரும்.

எத்தடை வரினும் எமது பயணம் தொடரும். எமது வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்டம் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# 100 ரூபாவுக்கு பாண் வேண்டுமா?

## பேக்கரி சங்கம் நிபந்தனை

கொழும்பு, ஜன.17

ஒரு கிலோ கோதுமைமாவின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டால், பாண் ஒரு இறாத்தலை 100 ரூபாவுக்கு நுகர்வோருக்கு வழங்கமுடியும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலரின் மதிப்பு குறைந்திருந்தாலும், ஒரு கிலோ கோதுமை மாவை 190 ரூபாவுக்கே வாங்கவேண்டியுள்ளது.

அதேவேளை, பாணின் விலை உயர்வு காரணமாக பாண் நுகர்வு குறைந்துள்ளது என்றும் பேக்கரி உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## மட்டு. வாழைச்சேனை காகித ஆலை மீள ஆரம்பம்

கொழும்பு, ஜன.17

வாழைச்சேனை காகித ஆலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

காகித ஆலையில் செயலிழந்த இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுர அழைப்பு

கொழும்பு, ஜன.17

நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு அமர்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-இ)



**சுபிரி தன சம்பத** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை | 0426 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| C | 3 8 7 8 9 5 |

**Super Ball** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2692 | P | 02 16 35 36 |

**சனிதா** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| S | 32 46 60 61 | 4853 |

**SASIRI** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0601 | 04 32 40 |

**லக்ன ராசி** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 05 17 28 38 | 4404 |

**KAPRUKA** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| M | 34 | 02 04 36 45 | 1868 |

**அத கோடிபதி** — DLB

| திகதி | தினம் |
|---|---|
| 16.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| B | 08 29 37 58 | 2518 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதி கிடைப்பதில் தாமதம்

# கொள்கலன் கப்பல்கள் திரும்பிச் சென்றன

கொழும்பு, ஜன.17

**கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நாட்டுக்கு வந்த சுமார் 25 அல்லது 30 கப்பல்கள் திரும்பிச் சென்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுவதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ஜனித் ருவான் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.**

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமதங்களுக்கு உடனடித் தீர்வுகளைக் காண, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சுங்க அதிகாரிகள் வாரத்தில் 7 நாள்களும் 24 மணி நேரமும் வேலை செய்ய ஒப்புக்கொண்டனர். எனினும் கொடவத்தைச் சுங்க முற்றத்துக்கு அருகில் வரிசைகள் இன்னமும் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## குரங்குகளால் நகை 'அபேஸ்'

கொழும்பு, ஜன.17

தலல பகுதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த குரங்குகள் அங்கிருந்த நகைப்பெட்டியை எடுத்துச் சென்றுள்ளன.

வீட்டிலுள்ளோர் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் வீட்டுக்காரர் நகைகளைத் தேடியபோது பக்கத்து வீட்டுக் கூரையின் மேலிருந்தும் பக்கத்து வீட்டு கழிவு நீர்த் தொட்டியிலிருந்தும் நகைகளை மீட்டுள்ளனர். (ச-6)

## வாடகைக்கு விடப்படும் அரச பங்களாக்கள்

கொழும்பு, ஜன.17

முன்னாள் அமைச்சர்கள், ஜனாதிபதிகளின் பாவனையிலிருந்த பங்களாக்களை வாடகைக்கு எடுப்பதற்கு பத்து தனியார் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேயரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள், ஜனாதிபதிகளின் பாவனையிலிருந்த பங்களாக்களை சுற்றுலாத் துறையினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து அதற்கான கேள்விப்பத்திரங்களையும் கோரியிருந்தது.

அதற்கெனக் குறித்த பங்களாக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் வாடகைக்கு விடுவது பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-6)




## பெண்களுக்கென அரிசி ஆலைகள்

கொழும்பு, ஜன.17

பெண்களின் வளர்ச்சியை மேம்படுத்த பெண்களுக்கென சிறிய ரக அரிசி ஆலைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக உணவுப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

இந்த அரிசி ஆலைகளுக்கான உதிரிப் பாகங்கள் ஏற்கனவே வந்துசேர்ந்துவிட்டன. அவை விரைவில் மகளிர் அமைப்புகள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

## முன்னாள் போராளி விபத்தில் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன.17

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளி ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நடந்துள்ளது.

மாற்றுத்திறனாளியான குறித்த முன்னாள் போராளி நடந்துசென்றபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதிலேயே அவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விஜயநாதன் வினோசித் (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

## சிறுவர்களிடையே நோய்த்தாக்கங்கள்

கொழும்பு, ஜன. 17

நாட்டிலுள்ள குழந்தைகளிடையே தற்போது நோய்த்தாக்கங்கள் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகளிடையே நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கல்லீரல் நோய்கள் மற்றும் நுரையீரல் நோய்கள் என்பனவே அதிகரித்துவருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)




நிலவுக்குப் பயந்து பரதேசம் போன கதையா, குழப்பவாதியளுக்குப் பயந்து இந்தமுறை தங்கட மத்தியகுழுக்கூட்டத்தை வழமைமாதிரி வவுனியாவில வைக்காமல் திருகோணமலையில நாளைக்கு நடத்தப்போயினமாம் வீட்டுக்கட்சிக்காரர். இப்ப கொஞ்சக்காலமா அந்தக்கட்சியின்ர மத்தியகுழுக்கூட்டம், பத்தியெரியிற கூட்டமா அனல் பறக்கிறமாதிரித்தான் நடக்குது. ஒவ்வொரு கூட்டத்திலையும் ஏதாவது புதுப்புதுப் பிரச்சினையளைக் கொண்டந்து, கட்சியில இருக்கிற தங்களுக்கு எதிரான ஆக்களை ஒவ்வொருத்தரா கலைக்கிறதுக்காக உடையார் ரீம் செய்யிற வேலைதான் உந்தப் பிரச்சினையள். ஒருமாதிரி கட்சியின்ர தலைவரா இருந்த பாவையரின்ர காத்தைப் பிடுங்கிப்போட்டினம். அதைவிட பொதுவேட்பாளாரா எலக்சனில நிண்டவர், பார்லிமெண்ட் எலக்சனை வேற கட்சியளில கேட்டவை, தங்களுக்கு எதிரா கட்சிக்குள்ள துணிஞ்சு நியாயம் கேட்ட முல்லைத்தீவு டாக்குத்தர் எண்டு ஒவ்வொரு கூட்டத்திலையும் ஒவ்வொரு விக்கெட்டா எடுத்தபடி இருக்கினம்.

குட்டக் குட்டக் குனிஞ்சு கொண்டே இருக்கேலாது தானே. அதால உடையாருக்கு எதிரான ரீமும், திருப்பி அடிக்கிறதெண்டு முடிவெடுத்திட்டுதாம். இவ்வளவுநாளும் இவையள் ஆரையெல்லாம் மத்தியகுழுவை விட்டும், கட்சியை விட்டும் நிப்பாட்டிச்சினமோ அவைக்கு சட்டப்படி எழுத்தில அறிவிக்காததால,அவையள் இனிமேல் நடக்கிற மத்தியகுழுக்கூட்டங்களுக்குப் போய் குழப்பிறதெண்டு பிளான் பண்ணியிருக்கினமாம், அது எப்பிடியோ உடையார் ரீமுக்கு தெரியவந்திட்டுது. அதாலதான் இவ்வளவு நாளும் வவுனியாவில வைச்சுக்கொண்டு வந்த மத்தியகுழுக்கூட்டத்தை இந்தமுறை திருகோணமலைக்கு மாத்திட்டினம். வவுனியாவை விட திருகோணமலையில மத்தியகுழுக்கூட்டத்தை வைச்சால் என்னலாபம்? எண்டு யோசிப்பியள். உடையாருக்கு எதிராக் குழப்பம் செய்ய வெளிக்கிட்ட ஆக்கள் வடக்கிலதான் கூட இருக்கினம். அவை வவுனியாவில கூட்டம் நடந்தால் கால்நடையா எண்டாலும் கட்டாயம் வந்துசேர்ந்திடுவினம். ஆனால் தூரவா இருக்கிற திருகோணமலையில கூட்டத்தை வைச்சால், அதைக் குழப்பிற கோஷ்டி மினக்கெட்டு அவ்வளவு தூரம் வராது எண்டது உடையார் ரீமின்ர நம்பிக்கை. அப்பிடி வந்தால் கூட படை, பரிவாரங்களோட வர ஏலாதெல்லோ. கனபேர் எண்டா தனி பஸ் இல்லாட்டி வாகனம் பிடிக்கோணும்.அதுக்கே ஒரு லட்சத்துக்கும் மேல முடியும். அதால குழப்பநினைக்கிறவை திருகோணமலைக்குப் போறதெண்டாலும் தனியத்தான் போவினம். அப்பிடித் தனியப் போனால் ஒண்டுமே பிடுங்கேலாம, நடக்கிறதைப் பார்த்திட்டு வரவேண்டியதுதான். இதுகளைக் கூட்டிக்கழிச்சுப் பார்த்துத்தான் திருகோணமலையில கொண்டுபோய் மத்தியகுழுக்கூட்டத்தை வைக்கினமாம்.

இந்தமுறையும் மத்தியகுழுக்கூட்டத்தில இன்னொரு பிரச்சினையை எடுக்கப்போயினமாம் உடையாரின்ர ஆக்கள். பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவிச்ச சடையாருக்கு எதிரா என்ன நடவடிக்கை எடுக்கிறது எண்டதுதான் அந்தப் பிரச்சினை. ஏற்கனவே சடையாருக்கு சப்போர்ட்டா கதைக்கிறவையை கலைச்சு விட்டிட்டினம். அதால உடையாரின்ர ரீமுக்கு முன்னால தனியாளா நிண்டுதான் சடையார் சமராடவேணும். எந்தத் திருகோணமலையில சடையார் கட்சி எலக்சனில உடையாரை விழுத்தினாரோ, அதே இடத்தில சடையாரின்ர எம்.பி. பதவியைப் பிடுங்கிறதுக்குப் பிள்ளையார் சுழி போடுகினம் போல.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவை. கணவன் – மனைவிக்கிடையே சிறிய அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். அலுவலகப் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கக் கூடும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் விஷயத்தில் தலையிடவேண்டாம்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட்டு விலகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த சுபச்செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சங்கடம் ஏற்படக்கூடும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்ச் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை குறைவதால், உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் அவ்வப்போது தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் சக ஊழியர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.17
வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரட்ணத்தின் அனுசரணையில் நல்லூர்ப் பிரதேச செயலக மூத்தோர் பேரவை நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை மு.ப 7.30 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நீரிழிவு, இரத்த அழுத்தம்,கொலஸ்ரோல் மற்றும் கண் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

பரிசோதனை மேற்கொள்ள வருகை தருவோர் இரவு 8 மணிக்குப் பின்னர் நீர், தேநீர் மற்றும் உணவு அருந்துதல் என்பவற்றைத் தவிர்த்து வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-40)

# பாலஸ்தாபன குடமுழுக்கு

வவுனியா,ஜன.17
தச்சநாதன்குளம், பண்டாரிக்குளம் அருள்மிகு ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி மு.ப 7 முதல் மு.ப 7.55 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விநாயக வழிபாடு, அனுஞ்ஞை மஹாகணபதி ஓமம், வாஸ்து சாந்தி, கடஸ்தானம், கலாகர்ஷணம், கும்பபூஜை ஓம வழிபாடுகள் என்பன நடைபெறவுள்ளன. (ச-40)

# குருதிக்கொடை

சாவகச்சேரி ஜன.17
பசுந்தேசம் அமைப்பும் பொது அமைப்புகளும் இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது

மேலதிக விவரங்களுக்கு 077 3868535, 0774323794 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது . (ச-40-9,159,27)



# பாலஸ்தான கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.17
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயப் பாலஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 6.57 மணி தொடக்கம் காலை 8 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளதாக ஆலயச் செயலாளர் சி. ஸ்ரீஜீவி தெரிவித்துள்ளார். (ச-40)



நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் பொங்கல் நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றன. (ச-17)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17
குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் தொடர்பாகவும், ஆலயத்தில் செய்யவேண்டியுள்ள புனருத்தாண வேலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான விசேட பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் ஆலய மஹோற்சவ உபயகாரர்கள், விசேட பூசை உபயகாரர்கள், மாதாந்த உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ச-66)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய தைப்பொங்கல் நிகழ்வுகள் சங்க வளாகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன. (ச-17)

# திருமறைக்கலாமன்ற பொங்கல் விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 17
திருமறைக்கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது கிராமிய நடனம், ஒயிலாட்டம், 'பவளத்தேர்' இசைநாடகம், 'சமூக ஊடகங்கள் இன்று மக்களை அறிவுடையோராக்குகின்றன/அடிமைப்படுத்துகின்றன' என்னும் தலைப்பிலான பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளது. (ச-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 17
மானிப்பாய் வடக்கு பெரியதம்பிரான் ஆலய உட்பிரவேச வாசல் கும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

இன்றைய யோசனைகளே நாளைய வரலாற்றை உருவாக்குகின்றன.

– ஜோன் மேனார்ட் கீன்ஸ்

# சீனாவும் இடியப்பச்சிக்கலும்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டிருக்கும் நிலையில், 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. பொருளாதாரம், கல்வி, ஊடகம், கலாசாரத்துறைகள் சார்ந்தே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. அதேநேரம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்திருக்கும் சீனா ஜனாதிபதி சீ ஜின்பிங், இலங்கையின் மீட்சிக்கு சீனா கைகொடுக்கும் என்றும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக சீனா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்றும் கூறியிருக்கின்றார். இடதுசாரிக்கொள்கையுடைய அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்பது பலரது அனுமானம். இந்த அச்சம் அயல் நாடான இந்தியாவிடமும் அதிகம் உண்டு. இலங்கையில் சீனா ஆழக் காலூன்றினால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறும் என்பதால், இந்த விடயத்தில் இந்தியா அதிக அவதானத்துடனேயே இருக்கின்றது. கடந்தகாலங்களில் இலங்கையில் இருந்த அரசாங்கங்கள் சீனாவின் பக்கம் சாய்ந்துவிடாதிருக்க இந்தியா பல காய் நகர்த்தல்களைச் செய்திருந்தது. ஆனால் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் சீனாவுடன் நெருக்கமாக இருந்தபோது, அதைக்கட்டுப்படுத்துவதற்கான அழுத்தங்களையும் இந்தியா கடந்தகாலங்களில் பிரயோகித்திருந்தது. மேற்குநாடுகளும் சீனாவின் பக்கம் இலங்கை சாய்வதை ஒருபோதும் விரும்பியதில்லை.

எனினும் அதையும் மீறி இலங்கையின் பிரதான கடன் வழங்குநராக சீனாவே இருக்கின்றது. உலகின் பல நாடுகளுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் சீனா தனது செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் விரிவுபடுத்தி வருகின்றது என்ற பரவலான குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையில், இந்தப் பட்டியலில் இலங்கையும் முன்னிலையில் இருக்கின்றது. சீனாவிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட முதலீட்டில் கட்டமைக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகம் இலங்கைக்குப் பெரும் சுமையாக மாறியது மட்டுமல்லாமல், அந்தக் கடனுக்காக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் கையளிக்கவேண்டிய நிலைக்கும் கடந்தகாலங்களில் தள்ளப்பட்டிருந்தது. அதேபோன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் மற்றொரு நாடான பாகிஸ்தான், சீனாவின் கடனுதவியில் கட்டப்பட்ட குவாதார் துறைமுகத்தால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்ததுடன், இப்போது அந்தத் துறைமுகத்தை பாகிஸ்தான் சீனாவிடம் அடகுவைத்திருக்கிறது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு, சீனாவின் பொறி இராஜதந்திரமும் ஒரு காரணம் என்பதும் பரவலாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் ஒன்று.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சீனாவின் பக்கம் சார்ந்து செயற்படுவது குற்றமில்லை என்றபோதும், நாட்டின் எதிர்காலத் திட்டங்களில் சீனாவின் பங்கு என்ன என்பதில் தெளிவான பார்வையுடன் செயற்படுவது அவசியமாகின்றது. சீனா அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழங்கும் கடன்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உந்துசக்தியை வழங்கும் என்று கருதப்பட்டாலும், இந்தத் திட்டங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் சாத்தியக்கூறுகளை அரசாங்கம் தீர்க்கமாக ஆராயவேண்டும். சீனாவின் பொறி 'இராஜதந்திரம்' என்ற குற்றச்சாட்டை சீனா ஒருபோதும் ஒப்புக் கொள்வதில்லை. பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக அள்ளிக்கொடுக்கத் தயாராக சீனா இருக்கும் நிலையில், அந்தப்பொறிக்குள் வீழ்ந்துவிடாமல் அதேநேரம், நாட்டின் முன்னேற்றத்துக்கான வழி வகைகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டிய கட்டாயம் அநுரகுமார அரசாங்கத்துக்கு இருக்கின்றது. அபிவிருத்தித்திட்டங்களுக்கு அள்ளிவழங்குகின்றது என்பதற்காகவும், முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தயராக இருக்கின்றது என்பதற்காகவும் சீனாவின் பக்கம் இலங்கை சாயுமானால், கடும் அழுத்தங்களைச் சந்திக்கவும் நேரிடும். இந்த இடியப்பச்சிக்கலை முன்னனுபவம் இல்லாத அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பதுதான் இப்போதுள்ள பெரும் கேள்வி.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# 'தூய இலங்கை' திட்டம் அமெரிக்கா வரவேற்பு



கொழும்பு, ஜன.17

இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை வரவேற்பதாக இலங்கைக்காக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்களைப் பாராட்டுகின்றோம். நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார கலாசாரத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட 'தூய இலங்கை' திட்டம் வரவேற்கத்தக்கது. ஸ்திரத்தன்மை ஒரு முக்கியமான முதற்படியாக இருந்தாலும், வளர்ச்சி, உற்பத்தித்திறன் மற்றும் நிலையான பொருளாதார நடைமுறைகளை வளர்ப்பதில் மிகவும் சவாலான பணி உள்ளது - என்றார். (ச-இ)

## 'அஸ்வெசும' கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜன.17
நாட்டில் ஏழ்மையான குடும்பங்களுக்கு வழங்கப்படும், அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு தொகையை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.
அதன்படி மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா உதவித்தொகை 17 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 8 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 14 நாள்களில் 2,352 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, ஜன.17
நாடளாவிய ரீதியில் டெங்குநோய் தற்போது வேகமாகப் பரவிவரும் நிலையில் இவ்வாண்டின் கடந்த 14 நாள்களில் 2 ஆயிரத்து 352 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாமல் குமாரவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன.17
கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அவதூறு ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் சமூக செயற்பாட்டாளரான நாமல் குமாரவைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அதன்படி எதிர்வரும் 29ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸாருக்கு வாகனங்கள் இந்தியா ரூ. 300 மில்லியன்

கொழும்பு, ஜன.17
இலங்கைப் பொலிஸ் நிலையங்களுக்கு கப் ரக வாகன்ங்களை வழங்குவதற்காக இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.
இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா, பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (ச-இ)

நாளை
சனிக்கிழமை - தை - 05
18.01.2025
சுபநேரம் : 03.35- 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பட்டங்கள் பெற்றும் வீதியில் பட்டதாரிகள்

## யாழில் விழிப்புணர்வுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

**வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள்மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நேற்று யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.**

இதன்போது வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றிணைந்து விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துகளை உள்வாங்கல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

பட்டங்களைப் பெற்றுவிட்டு சாதாரண தொழில்களிலேயே நாம் பணியாற்றுகின்றோம் எனத் தெரிவித்து வீதியைக் கூட்டுதல், குப்பை வண்டியைத் தள்ளுதல் போன்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கை உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத்தூபி முன்றலில் காலையில் ஆரம்பமாகி தொடர்ந்து யாழ். நகர்ப்பகுதி வரை பேரணி சென்று நிறைவுற்றது. (ச-27,17,20)

எல்லைதாண்டிய மீன்பிடி

# இந்திய மீனவர்கள் 6 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.17

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தின் அடிப்படையில் இந்திய மீனவர்கள் இருவருக்கு 9 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் ஆறு பேர் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் 8 மீனவர்கள் கடந்த மாதம் 8ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கை விசாரித்த நீதிபதி நளினி சுபாஸ்கரன் 6 மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்தார். மேலும் படகு ஓட்டுநர்கள் இருவருக்கு தலா 40 இலட்சம் ரூபா அபராதமும் 9 மாதகால சிறைத்தண்டனையும் விதித்து உத்தரவிட்டார். (ச-100)



# கோமாதா வழிபாடு

வவுனியா, ஜன.17

விவசாயிகளுக்குக் கைகொடுக்கும் மாடுகளுக்கு நன்றி தெரிவித்து வவுனியாவில் கோமாதா வழிபாடு சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி, மாலை அணிவித்து, பொங்கல் இட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. வவுனியா கந்தசாமி ஆலயத்திலும் மாட்டுப் பொங்கல் சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வுகளில் அந்தண சிவாச்சாரியார்கள், ஆலய பக்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-40-18)

# நல்லூர்ப் பிரதேசத்தில் 64 சட்டவிரோத கட்டடங்கள்

யாழ்ப்பாணம், ஜன.17

நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 64 சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பாக நல்லூர்ப் பிரதேச சபையால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த 2016 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 64 சட்டவிரோதக் கட்டடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் 57 சட்டவிரோதக் கட்டடங்கள் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு தண்ட அறவீடுகளுடன் அனுமதிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை 7 சட்டவிரோதக் கட்டடங்கள் மீதான வழக்கு விசாரணைகள் தொடர்கின்றன.

இதுவரை குறித்த கட்டடங்களை இடிப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் வழக்குப் பரிசீலனையில் உள்ளதாகவும் நல்லூர்ப் பிரதேசசபை தெரிவித்துள்ளது. (ச-125)

அர்ச்சுனா எம்.பி.யின்

# உறுப்புரிமை மீதான மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன.17

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அபிநவ நிவஹல் பெரமுன அமைப்பின் தலைவர் ஓஷல ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அர்ச்சுனா இராமநாதன், சட்டரீதியாக மருத்துவத் தொழிலில் இருந்து விலகாமல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார் என்றும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறும் ஓஷல ஹேரத்தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுமீதான விசாரணை நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கொபல்லவ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே வழக்கின் விசாரணையை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ச-இ)

# பாம்பு தீண்டிய இளைஞர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜன. 17

வயல்வெளியில் பட்டம் ஏற்றிய இளைஞர் ஒருவர் பாம்பு தீண்டிய நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவிலில் இடம்பெற்றுள்ளது. (ச- 9)



# புத்தர் சிலைகள் மருதங்கேணிக்கு

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கிய மர்ம மிதவைப் படகிலிருந்த 18 புத்தர் சிலைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மியான்மரிலிருந்தே இந்த மிதவைப்படகு வந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மீட்கப்பட்ட சிலைகள் உட்பட்ட பொருள்கள் தற்போது மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் விழா

கிளிநொச்சி, ஜன.17
இரணைமடு நீர்த்தேக்கம் நீர்ப்பாசனத் துக்காக திறந்துவிடப்பட்டு 105 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நன்றி செலுத்தும் பொங்கல் விழா நேற்று வியாழக்கிழமை கனகாம்பிகை அம் மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ்.முரளிதரன், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், விவசாயத் திணைக்களம்சார் அதிகாரிகள், உத்தி யோகத்தர்கள், விவசாயபீட மாணவர் கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ச-41-113)



சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வட்டுக் கோட்டைப் பிரதேச சமூர்த்தி வங்கியின் பொங்கல் விழா சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் நா.அகி லன் தலைமையில் இடம்பெற்றது. (ச-125)







## உடுப்பிட்டியில் பட்டப்போட்டி!

யாழ்ப்பாணம், ஜன. 17
தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு உடுப்பிட்டியில் பட்டப்போட்டி நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. குறித்த பட் டங்களில் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த பட்டங்களுக்கு பெறுமதியான பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. பட்டப் போட்டியில் முதலாம் இடத்தை க.துசனந்து, இரண்டாமிடத்தை சி.உஷாந்தன், மூன்றாவது இடத்தை மிதுஷன் ஆகியோர் பெற்றுக்கொண் டனர். (ச-22,66)

## 'மில்கோ' உற்பத்திப்பொருள்கள் யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தல்



யாழ்ப்பாணம், ஜன. 17
இலங்கைத் தயாரிப்பான "மில்கோ ஹைலண்ட் பால்மா" உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணம் குடா நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் ஆரம்பநிகழ்வு சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் "ஹைலண்ட் பால்மா" முக வர்நிலையத்தை கடற்றொழில் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகர் திறந்து வைத்தார். (ச-40-27)



கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலக முன்றலில் தைப்பொங்கல் விழா கடந்த புதன்கிழமை நடை பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன், மேல திக மாவட்டச் செயலர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய் வாளர், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-40,113)


## மரண அறிவித்தல்



### வேலாயுதபிள்ளை செந்தில்வேல்

(முன்னாள் களஞ்சியக்காப்பாளர் சீறாநிறுவனம், கணினி வடிவமைப்பாளர் சாயிபிறின்டேஸ்))

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் துரைவீதி இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை செந்தில்வேல் அவர்கள் நேற்று (16.01.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும்-பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வனும் சரவணமுத்து-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வனிதா (ஆசிரியை யா/உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், சங்கர்சன் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), இலக்கியன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனசா, கிரிஜா (யா/ஊரெழு கணேஷா), விஜிதா, அனுஷா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபானந்தஜெயக்குமார் (வர்த்தகம்), செல்வேந்திரன் (சட்டத்தரணி), சபேசன் (லண்டன்), மகேந்திரன் (கனடா), மோகனவதனி (லண்டன்), மதிவதனி, வினோதினி, சுதாவதனி (வவுனியா தெற்கு, கல்விவலயம்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கவிநயா, திஷாங்கன், அட்சரன், சுதர்சன், அர்மிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனக்ஷன், சஞ்சை, பபிசன், கவிநயா, சுகன்யா, தனுஷன், அட்சயன், அபிஷன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2297) P-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1945



மறைவு 15 . 01 . 2025

## பொன்னம்பலம் ஆனந்தநடராஜா

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும் நியூயோர்க் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் ஆனந்தநடராஜா நேற்றுமுன்தினம் (15.01.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான பொன்னம்பலம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான கந்தானை கந்தையாபிள்ளை-நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி அவர்களின் ஆருயிர்க் கணவரும், செந்தூரன், அகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா, சுரேனுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சயனவியின் அன்புப் பேரனும், காலம்சென்றவர்களான மனோரஞ்சிதம், தில்லைநடராஜா, செந்தில்நடராஜா மற்றும் சுந்தரநடராஜா, திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலம்சென்ற கோபாலன் மற்றும் திலகவதியார், மாலினி, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக New Hyde park funeral home, 506 Lakeville road, New Hyde Park NY 11040 United States. என்னும் இடத்தில் நாளை மறுதினம் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00pm - முதல் 8.00pm வரையும் வைக்கப்பட்டு மறுநாள் திங்கட்கிழமை (20.01.2025) முற்பகல் 9.00 - 11.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் Long Island Cremation Company, 91 Eads Street, West Babylon, NY 11704 என்னுமிடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

**செந்தூரன் மகன் : 7185018868, 0771603314**
**அகிலன் மகன் : 3478851651**
**புனிதவதி மனைவி : 9294045458**

(CS/57222) J-1

**தகவல் :**
**செந்தூரன் (மகன்)**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 12 . 1938



மறைவு 14 . 01 . 2025

## மாணிக்கம் குணசிங்கம்

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்)**

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குணசிங்கம் அவர்கள் கடந்த (14.01.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-அம்பிகாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் சாந்தகுமாரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் கனகசிங்கம், இராசம்மா, கனகாம்பிகை, துரைசிங்கம் (கனடா), காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் சற்குணசிங்கம் ஆகியோரின் சகோதரனும் வசந்தகுமாரி காலஞ்சென்ற பிறேமகுமாரி மற்றும் றஞ்சினி, கோகிலா (கனடா), ஆகியோரின் மைத்துனரும் Dr தயாரூபி (நோர்வே), ஜெயரூபி, Dr.தவராணி, சாஜிசங்கர் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், சிறீதரன் (நோர்வே), ரவீந்திரன் (M.S.O), காலஞ்சென்ற Dr.குலசிங்கம் மற்றும் மங்களேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் வைஷ்ணவி பிரதீபன் (சட்டத்தரணி), நிரோஜன் (சுவிஸ்), நிஷா துஜிக்காந் (சுவிஸ்), சிருஷ்டிகா, ருஷாந் (அவுஸ்திரேலியா), நிலாஷினி கோகிலன் (பிரான்ஸ்), Dr.கேசி (நோர்வே), கௌதம், ஹவின் ஆகியோரின் பேரனும் ரிகான் (சுவிஸ்), மோஹிஷா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் குளத்தடி வீதி, சங்கானை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் விளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**குளத்தடி வீதி,**
**சங்கானை.**

(CR 44118) V-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**


# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை,
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள்
பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர்.
மிகப்பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு
துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596. 071 999 9306**

# காணி உடன் விற்பனைக்கு

காங்கேசன்துறை (KKS) நகுலேஸ்வரா வீதியில் பஸ் சேவை நடைபெறும் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 10 காணி (கடைகள், யாட் அமைக்கக்கூடிய காணி) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**076 449 9868**

(CS 22991) P-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 04 . 1960



மறைவு 16 . 01 . 2025

## கந்தசாமி மகேந்திரன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் முரசொலி கதிரிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மகேந்திரன் அவர்கள் நேற்று (16.01.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம்-தங்கமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் கலைவாணியின் அன்புத் தந்தையும், இறாகேஸ்வரி, இந்திராதேவி, சிவபாக்கியம் (பேபி), றேவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார், ஞானகுமார், தெய்வகுமார், இரத்தினேஸ்வரி, பாலேஸ்வரி, நாகேஸ்வரி, பாமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# கண்ணீர்க் காணிக்கைகள்



எமது துறையின்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி. E. Y. A. சார்ள்ஸ்
அவர்களின் பாசமிகு தாயார்

**மேரி திரேசா யூஜின் யூகராஜா**

அவரது இழப்பினை அறிந்து ஆழ்ந்த
துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**[illegible]னி விஞ்ஞானத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

DCS
UNIVERSITY OF JAFFNA

# வறுமையை ஒழித்து கல்வியை வளர்ப்போம்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

தற்போது பாடசாலையை விட்டுவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் நாட்டின் பொருளாதாரப்பின்னடைவும் கிராமிய வறுமையுமே என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன்தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தைவிட எமது அரசாங்கத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாங்கள் எமது நாட்டினுள்ளேயே தொழிற்துறைகளை உருவாக்கும்போது மாணவர்களும் இங்கே கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எதிர்காலத்தில் வடக்கில் மூன்று மத்திய பொருளாதார நிலையத்தை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். கடந்த காலத்தில் மனித வளம் சிறந்த முகாமைத்துவம் இல்லாமையால் வீணடிக்கப்பட்டது.

ஆனால் இனி நாங்கள் மனிதவளத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு நிர்வகித்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-33-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பப்பெண் ஆஸியில் உயிர்மாய்ப்பு

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் யாழ்ப்பாணம் புன்னா லைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில் அந்நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-66)

**வீடு வாடகைக்கு தேவை**

3 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 959 5930

## நீங்கா நினைவில்

23ஆம் ஆண்டு | 29ஆம் ஆண்டு




மலர்வு 27.04.1938 — உதிர்வு 01.02.2002

**அமரர் வெ.வேலு**
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)

திதி: 17.01.2025

அன்னை மடியில் 21.02.1977 — அமலன் அடியில் 13.06.1996

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும்
நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 06 . 1951 — மறைவு 15 . 01 . 2025



**பத்மநாதன் கமலாதேவி**

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கமலாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (15.01.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதன்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் மகேந்திரதாசன் (ஓய்வு நிலை வைத்தியசாலைச் செயலாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), அருந்ததி (சுவிஸ்), கலைவாணி (வைத்தியசாலை மேற்பார்வையாளர் யாழ். போதனா வைத்தியசாலை, மற்றும் காலஞ்சென்றவர்களான சதயராணி, சண்முகதாஸ், புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவானி, கருணாநிதி, ரவிச்சந்திரன் (ஓய்வுநிலை அலுவலகப்பணியாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) மற்றும் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

333 (117) ஆனந்தன் வடலி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 314 9639

(CS 436) V-1

## 14ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 04 . 1968 — மறைவு 23 . 01 . 2011



அமரர்
**இரத்தினம் ஸ்ரீதரன்**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பதின்னான்கு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

செட்டியார் வளவு,
(பழையபொலிஸ் நிலைய வீதி)
சுன்னாகம்.

(CS/67213) J-1

துயர்பகிர்வோர்
மதிவதனி (அக்கா)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 09 . 1949 — மறைவு 29 . 01 . 2024



அமரர்
**இராசமலர் (கிளியக்கா) இலங்கைநாதன்**

ஆசையுடன் எங்களை ஈன்றெடுத்து
அன்புடன் எங்களை வளர்த்தெடுத்து
அம்மாவாகவும், அப்பாவாகவும்
எம்மை நல்வழிப்படுத்தி
இறைவனடி சேர்ந்த எங்கள் அம்மா
எந்நாளும் உங்கள் நினைவுகளுடன்
வாழ்ந்திருப்போம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(CS/67211) J-1

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தைப்பொங்கல் வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. (ச-66)

# கௌரவிப்பும் கலைநிகழ்வும்



வரணிக் குடும்ப முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பும் கலைநிகழ்வும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு முன்புறமாக அமைந்துள்ள கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் வரணிக் குடும்ப இணைப்பாளர் திருமதி லோ.கேதிகா தலைமையில் இடம்பெற்றது. (ச-33-159)



வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதேச செயலர் க.சிவகரன் தலைமையில் இடம்பெற்றது. (ச-9)



காரைநகர் தோப்புக்காடு தொண்டர் சபையின் கல்விச் சேவை ஆரம்பவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை காரைநகர் தோப்புக்காடு சுப்பிரமணிய ஆலய முன்றலில் தொண்டர் சபைத் தலைவர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. (ச-33-125,66)



மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் ஞாபகார்த்தமாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற நூறு குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் பெறுமதிமிக்க உணவுப்பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-40)




### தேசிய மக்கள் சக்தியின்

## நிர்வாகக் காரியாலயம் வடமராட்சியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகக் காரியாலயம் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரனால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பிரதேச இணைப்பாளர் மாடசாமி செல்வராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.தங்கரூபன், பிரதேச கடற்றொழில் சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)





தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் மாவட்ட சர்வ மதக்குழு உறுப்பினர்களும், 'சொண்ட்' நிறுவனத்தினரும் இணைந்து நடத்திய தைப் பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் சுண்டுக்குழி யில் உள்ள 'சொண்ட்' அலுவலகத்தில் நடைபெற்றது. (ச- 27)

# அறுவடை விழா

சாவகச்சேரி, ஜன.17

தென்மராட்சி தெற்கு மறவன்புலவுக் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் அறுவடை விழா மறவன் புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

விழாவில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், [illegible] உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-25,9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## SLIIT NORTHERN UNI

# OPEN DAY

**18th & 19th January 2025**
**10.00 AM to 3.30 PM**

**FREE ENTRY**

**LOCATION:**
SLIIT Northern Uni,
Arasady Road,
Kantharmadam, Jaffna

## COVERING SESSIONS

1 TECH EXHIBITION
2 FACULTY MEET
3 STUDENTS INTERACTION
4 CAMPUS TOUR
5 CAREER GUIDANCE

**SLIIT NORTHERN UNI OFFERED**

UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

APPLICATION CLOSING DATE
**13TH FEB 2025**

GENERAL APTITUDE TEST
**15TH FEB 2025**

(CS/57222) J-1

**021 7534 807**

northernuni.lk
contactus@northernuni.com

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தியத்தூதுவருடன் நாமல் சந்திப்பு

கொழும்பு, ஜன. 17
இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஸ் ஜா மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பின் போது இந்தியா - இலங்கை இடையேயான பன்முகத்தன்மை கொண்ட பிரச்சினைகள், வளர்ச்சித் திட்டங்கள், முதலீடுகள், தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இரணைமடுவின் கீழுள்ள குடும்பங்கள் இடம்பெயர்வு

கிளிநொச்சி, ஜன.17
இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றப்படும் நிலையில் கண்டாவளை, ஐயன்கோயிலடி பெரியகுளம், ஊரியான்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ள அனர்த்தம் காரணமாக இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
அதன்படி கண்டாவளை மகா வித்தியாலயத்தில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 371 பேரும் ஐயன்கோயிலடி பாடசாலையில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேரும் ஊரியான்பகுதியில் 62குடும்பங்களைச் சேர்ந்த 190 பேரும் பெரிய குளம் பகுதியைச் சேர்ந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலகம் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (ச-113)

## மஹோற்சவம்

சங்கரத்தை குளத்தடி ஸ்ரீ நாக பூசனி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 24 ஆம் திகதி சப்பரத்திருவிழாவும், 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் , 26 ஆம் திகதி பால்குடபவனியும் மற்றும் 108 கலச சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (ச-40)

# வனவளத் திணைக்களம் அபகரித்த காணிகளை உடன் விடுவியுங்கள்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

மன்னார், ஜன.17
வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து ஆக்கிரமித்த காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
முசலிப் பிரதேச செயலகப்பிரிவில் பெருமளவான மக்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன. பிரதேச செயலர், கிராமஅலுவலர், காணி உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தெரியாமல், வனவளத் திணைக்களம் எல்லைக்கற்களை இட்டு மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பு செய்கின்றது.
வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புச் செயற்பாடே மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே வனவளத்திணைக்களம் ஆக்கிரமித்த மக்களின் காணிகளை முதலில் விடுவிக்க வேண்டும் - என்றார். (ச-26)

# மரண அறிவித்தல்

பிறப்பு
15
08
1939



இறப்பு
12
01
2025

## சூசைப்பிள்ளை மரியநாயகம்

சுண்டிக்குளி செரில்ஸ் முன்னாள் உரிமையாளர்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பஸ்ரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை மரியநாயகம் அவர்கள் 12.01.2025 ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சூசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி லாசரஸ்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரி மாகிறேற் வினிற்றியா அவர்களின் அன்புக் கணவரும் சுரேஷ். மிராணி. காலஞ்சென்ற நிவாணி. சித்ராணி. நிரஞ்சன். ரூபன் ஆகியோரின் அருமைத் தந்தையும் அமல்ராஜ். ஆனந்தன். விவேக். ஜிவித்தா (சூட்டி). நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலோஷ். நிருஷா. ஸரிசா. லேயா. ஜோசுவா. ஜோனத்தன். நின்சிகா. அபிஷோன் (ரெனி) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆன்கிறேஷ். றோஸ். பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஏபிரகாம். இரத்தினசிங்கம். பிரான்சிஸ். லோரா செல்வநாயகம். சிங்கராயர் (City Medicals - யாழ்ப்பாணம் ). அருள்சேவியர் மற்றும் கமிலஸ் செல்வரட்ணம் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் A.F Raymond Funeral Directors, Raymond House 115, D.S.Senanayake Mawatha, Colombo -08 மலர்ச்சாலையில் 18.01.2025 சனிக்கிழமை காலை 10.00 மணி - இரவு 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இறுதி ஆராதனை நடைபெற்று பொரளை பொதுமயானத்தில் (General Cemetary - Borella) நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: மனைவி. பிள்ளைகள், குடும்பத்தினர்
077 8890453 (மனைவி)

# குருநகர் சுற்றிவளைப்பு ஆறு பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சுற்றிவளைப்பில், ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (ம-20)

இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்
பிரிவு 58

- Diploma in English/ Spoken English/ Business English
- Diploma in ICT/ AI/ Cyber Security
- Diploma in Psychology& Counselling
- Diploma in Human Resource Management
- Diploma in Human Rights
- Diploma in Political Science
- Diploma in Computeriged Accounting
- Diploma in Business Management
- Diploma in Caregiver
- Diploma in Hotel Management
- Diploma in Digital Marketing

காலம்: 03 மாதங்கள் பெறுமதி மிக்க சான்றிதழ்
ஆரம்பம்: 18.01.2025 Thirunelvelyy
IPS தொடர்பு 077 570 4893 074 234 9120
(CS 2301) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி பராமரிப்பாளர் தேவை**

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் அமைந்துள்ள காணியை பராமரிப்பதற்கு காணி பராமரிப்பாளர் தேவை.

வயதெல்லை 50-60

தொடர்புகளுக்கு:

074 266 2328, 071 176 6758

# வடக்குமாகாண தைப்பொங்கல் விழா!

யாழ்., ஜன. 17

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் 'வடக்கு மாகாண தைப் பொங்கல் விழா' மாதகல் நுணசை முருக மூர்த்தி கோவில் முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-22)

# செல்வந்தர்களின் கைகளில் அமெரிக்காவின் அதிகாரம்!

## அதிபர் பைடன் கவலை

மிகப்பெரிய செல்வந்தர்களின் கைகளில் அமெரிக்காவின் ஆட்சி அதிகாரம் செல்வதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். பைடனின் பதவிக்காலம் ஜனவரி மாதம் 19ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. இதையடுத்து அவர் நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினம் தனது இறுதி உரையை ஆற்றினார். இதன்போதே, அமெரிக்காவின் எதிர்காலம் குறித்து அச்சமடைவதாகவும், அமெரிக்கர்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அதிபர் பைடன் தெரிவித்துள்ளார். இன்று அமெரிக்காவில் அதீத செல்வம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு கொண்ட ஒரு சுயநலக்குழு உருவாகி வருகிறது. இது எமது முழு ஜனநாயகத்தையும், எமது அடிப்படை உரிமைகளையும்சுதந்திரங்களையும், அனைவரும் முன்னேறுவதற்கான நியாயமான வாய்ப்பையும் அச்சுறுத்துகிறது. ஒருசில செல்வந்தர்களின் கைகளில் அதிகாரம் ஆபத்தான முறையில் குவிகிறது. அவர்களின் அதிகார துஷ்பிரயோகம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் ஆபத்தான விளைவுகள் ஏற்படும் என்றும் பைடன் கூறியுள்ளார். மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என்று பைடன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23 . 08 . 1945

மறைவு 14 . 01 . 2025

**அமரர் திருமதி ஜெபமணி ஜோசவ்**

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையின் பணிப்பாளரும், சபையின் மாவட்ட மகளிர் குழுவின் தலைவியும், பல்வேறு ஆரம்ப சங்கங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு அமைப்புக்களின் தலைவியாகவும், நிர்வாகியாகவும், கூட்டுறவுப் பணிகளை அணி செய்த, மதிப்பு மிக்க கூட்டுறவாளராகிய அமரர் ஜெபமணி ஜோசவ் அவர்களின் இழப்பால் கூட்டுறவுச் சமூகம் துயரடைகின்றது.

அவரின் கூட்டுறவுப் பணிகளை நன்றியுடன் மனம் கொள்ளும் இவ் வேளையில் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இல.12, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்
பணியாளர்கள், கூட்டுறவாளர்கள்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை

(CR 44116) V-1

## கண்ணீர் அஞ்சலி



முதுபெரும் கூட்டுறவாளரும், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினரும்,யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர் குழுத்தலைவியும் அத்துடன் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் தலைவரும், நிர்வாகியுமான

**ஜெபமணி ஜோசவ்**

அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி**

(cr 44114) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட சி.க.வ.கூ. சங்கங்களின் சமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், மகளிர்குழு தலைவியுமாகிய

அமரர்

**மேரி ஜெபமணி ஜோசவ்**

அவர்கள் இவ்வுலகை விட்டு இறைவன் திருப்பாதங்களை பற்றிக் கொண்டமையையிட்டு அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!

மண்ணில் 1945.09.23

விண்ணில் 2025.01.14

ஆழ்ந்த துயரத்துடன்...
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ். மா.சி.க.வ.கூ.ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

(CR/44115) J-1

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 02 04 1937

மறைவு 29 12 2024

**திரு. ஆறுமுகம் சின்னையா சுப்பிரமணியம்**

(இளைப்பாறிய அரச நிர்வாக அலுவலர் தரம் 1.
அகில இலங்கை சமாதான நீதவான்)

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஆ.சி.சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.01.2025) சனிக்கிழமை கொழும்பு முகத்துவாரத்தில் இடம்பெறுவதோடு, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனை நாளை மறுதினம் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் **பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில்** நடைபெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் பேரிழப்பால் துவண்டு நின்ற வேளையில் நேரிலும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், எமக்கு தேநீர், சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு பல வழிகளில் உதவி செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CB.29575) (N-1)

**குடும்பத்தினர்.**

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சதாசிவம் தெட்சணாமூர்த்தி**

(ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947

மறைவு 30.01.2013

திதி: சங்கடஹரசதுர்த்தி (17.01.2025)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!

விண்ணுலகம் சென்று இன்று பன்னிரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கஜபதி செட்டி லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி - சிவயோகமணி

(cs.57208) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)
## பதவி வெற்றிடம், விண்ணப்பம் கோரல் - வெளிவாரி
## பதவி - கிளைமுகாமையாளர் குறி இல 208/13

**01. சம்பள அளவுத் திட்டம் :**
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபத்திற்கமைய 208/13 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்
18360 - 160X10 - 170X10 - 21660
220320 - 1920X10 - 2040X10 - 259920
இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

**02. வயதெல்லை:** 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
**அ)** கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்
**அல்லது**
**ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

**04. விண்ணப்பமுடிவுத் திகதி :** 31.01.2025

**05. விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 25.00 இனை செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிளைமுகாமையாளர் 208/13 பதவிக்கான விண்ணப்பம் "எனக் குறிப்பிட்டு "தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( வது), இல.127, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்"என்னும் முகவரிக்கு 2025.01.31 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(CS 44117) V-1

**மு.ஜெ.சுஜீந்திரன்,**
**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது**

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- | மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- | சிவகுரு பாஸ்கரன் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- | சிவகுரு பாஸ்கரன் |
| முகவரி | :- | 43/5, சுதுமலை வடக்கு, மானிப்பாய் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 18, கும்பலை கருகப்புலம் இணைப்பு வீதியில் ஆதன இல.22 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற் பற்று, அளவெட்டி இறை "வேரை" என்ற ஆதனம் S. சின்னட்டி என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 03.01.2023 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் விநாயகமூர்த்தி இளங்குமார் அவர்கள் முகதாவில் இலக்கம் 1480 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த 1480 ஆம் இலக்க உறுதிக்கான தாயுறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு குமாரசுவாமி விசுவலிங்கம் முகதாவில் 02.02.2009 ஆம் திகதியில் 2196 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விண்ணப்பதாரருக்கு இவ் ஆதனத்தை விற்பனை செய்த ஐயாத்துரை பத்மதாஸிற்கும் அவரது மனைவி பத்மதாஸ் பெண் கலைவாணிக்கும் வந்தடைந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2196 ஆம் இலக்க உறுதியில் விண்ணப்பதாரருக்கு ஆதனத்தை விற்ற தம்பையா றெபின் மறுநாமம் தம்பையா ஜெயக்குமார் (என உறுதியில் சொல்லப்படும்) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ந. தம்பிமுத்தன் முகதாவில் 22.11.2004 ஆம் திகதிய 4770 ஆம் இலக்க அறுதி மற்றும் அதே நொத்தாரிசு முகதாவில் 26.11.2004 ஆம் திகதியில் நிறைவேறிய 4773 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 4770 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதியாக குறிப்பிடப்படும் பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 4769 ஆம் இலக்க 22.11.2004 ஆந்திகதிய வெளிப்படுத்தல் உறுதியில் அப்பையா கைம்பெண் யோகம்மாவும், செல்லர் முருகையாவும், செல்லர் சட்டநாதனும், யோசேப்பு கைம்பெண் பூரணமும், வெள்ளையர் சின்னராசாவும் பெண் இலட்சுமியும் ஆகியோரால் குறித்த ஆதனம் முதலில் எங்களில் முதலாம் பேரின் தாயார் காலஞ்சென்ற பொன்னி என்பவருக்கும் எங்களில் 2ம் 3ம் 4ம் பேர்களின் தாயார் காலஞ்சென்ற செல்லர் பெண் பசுபதி என்பவருக்கும் எங்களில் 6ம் பேரின் தகப்பனார் காலஞ்சென்ற சம்பரி சின்னட்டி என்பவருக்கும் சொந்தமாக இருந்ததென்றும் ஆனால் இது தொடர்பான உறுதிகளெதுவும் கிடைக்க வில்லை என்றும் குறித்த உறுதிகள் பற்றிய விபரங்கள் தெரியாததால் இவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைக் கூட யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் பெற இயலாதிருக்கிற தென்றும் எனினும் பெற்றோர் வழி முதுசமாக தற்போது எங்களுக்குச் சொந்தமாகவுள்ள இவ்வாதனம் எமது நீண்ட காலப் பிசகுதடையற்ற தொடர்ச்சியான ஆட்சியிலிருந்து வருகிறதென்றும் இது மரணச் சொத்து நிருவாகத் துக்குக் குறைந்த பெறுமதியுடையதென்றும் இந்த விபரங்களை வெளிப்படுத்தி உறுதி முடிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளதென்றும் அதனாலேயே இவ் வெளிப்படுத்தல் உறுதியை முடிப்பதாக வும் குறித்த உறுதியில் கூறப்பட்டுள்ளது. உறுதியானது யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H790/44 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளின் பிரதி ஆதன வரிப்பெயர மாற்றத்திற்கு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கணேஸ்வரம் J/218 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள "வேரை" நிலப்பரப்பு ஒன்று குளி சைபர் தசம் ஆறு ஆறு (நில.பர.01 குளி 0.66) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் 18.11.2004 ம் திகதியில் அளந்து 1350ம் இலக்கத்தில் வரைந்த நில அளவைப் படத்தில் துண்டு 01 எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்று குளி சைபர் தசம் ஆறு ஆறுக்கும் எல்லைகள்

**இதற்கு எல்லைகள்**

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | மாணிக்கம் ஜெயகுமாரின் ஆதனம் |
| வடக்கு | :- | சிறீரஞ்சன் பெண் சாந்தினியின் ஆதனம் |
| மேற்கு | :- | றோட்டு |
| தெற்கு | :- | ஐயாத்துரை பெண் தங்கரத்தினத்தின் ஆதனம் |

இவ்வெல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை சிவகுரு பாஸ்கரன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சிவகுரு பாஸ்கரன் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS/57215) II-1

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair
15th EDITION
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
வருகை
JITF 2025
15TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.30 மு.ப - 8.30 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
(Next to Jaffna Fort) (யாழ் கோட்டைக்கு அருகில்)
PLATINUM SPONSOR DIMO · GOLD SPONSORS · SILVER SPONSORS · OFFICIAL SPONSORS · ORGANIZED BY LECS
Imalka: +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk

## மணிவிழா வாழ்த்து




எமது பாடசாலை அதிபர்

**திரு. பசுபதி தர்மபூபதி** அவர்கள்
B.Ed, Dip. in . Ed, M.Ed,
SLPS 2 (குருபிரதீபா பிரபா)

**சேவை விபரம்**

- யா / தம்பாட்டி அ.த.க.பா - 1992.11.12 - 1995.12.31 (ஆசிரியர்)
- மு / யோகபுரம் மகாவித்தியாலயம் - 1996.01.01 - 2003.08.07 (ஆசிரியர்)
- மு / ஐயன்கன் குளம் மகாவித்தியாலயம் - 2003.08.08 - 2005.02.15 (ஆசிரியர்)
- மு / ஐயன்கன் குளம் மகாவித்தியாலயம் - 2005.02.16 - 2015.09.02 (அதிபர்)
- மு / கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் - 2015.09.03 - 2025.01.18 (அதிபர்)

2025.01.19 இல் அகவை அறுபதில் தடம் பதிக்கும் எமது பாடசாலை முதல்வருக்கு பணி நிறைவு விழாவினை 2025.01.18 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு **பாடசாலை ஞானம் அரங்கில்** நடத்தவுள்ளோம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

வாழ்த்துவோர் :
**ஆசிரியர் நல்லுறவு மன்றம், பாடசாலை சமூகம்**
**யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்**

(எ.44113) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...



இரட்டைக் கொலை தொடர்பான வழக்கு விசாரணையொன்று மன்னார் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெறவிருந்தது. இந்த வழக்கு விசாரணைக்காக வந்தவர்கள் மீதே கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திடீரென மோட்டார்சைக்கிளில் வந்த தாக்குதல்தாரிகள் அவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க ஏனைய இருவர் படுகாயங்களுடன் ரத்த வெள்ளத்தில் வீழ்ந்தனர். அவர்களை பொலிஸாரும் பொதுமக்களும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் (வயது-61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது-42) ஆகியோரே நேற்றுப் படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

**பழைய பகை**

2022ஆம் ஆண்டு ஜூன் மன்னார் உயிலங்குளம் பகுதியில் மாட்டு வண்டிச் சவாரியொன்று நடைபெற்றது. இதன்போது ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து யேசுதாசன் றோமியோ (வயது-40) மற்றும் யேசுதாசன் தேவதாஸ் (வயது-33) ஆகிய இரு சகோதரர்கள் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி வெட்டிப்படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த இரட்டைக் கொலைகளில் சந்தேகநபர்களாகக் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இருவரே நேற்றைய துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

**பொலிஸார் மீது கடும் அதிருப்தி**

நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றுப் பட்டப்பகல் மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூடு பொலிஸார் மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நீதிமன்றத்தில் ஆயுதம் ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், சம்பவ இடத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில்தான் இராணுவ முகாமொன்றும் உள்ளது. அத்துடன், இதுவொரு பாரதூரமான குற்றப்பின்னணி கொண்ட விடயம் என்பதால், பொலிஸார் போதிய எச்சரிக்கையுடன் செயற்படவில்லை என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடும் கடும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளது.

**தீவிர விசாரணை**

சந்தேகநபர்கள் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைத் துப்பாக்கியே இந்தப் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது. (அ-ம-56-213-26)

# அரிசி இறக்குமதியில் தானியங்களே வருகை

கொழும்பு, ஜன. 17

நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் அதிகளவில் பயறு, வேர்கடலை மற்றும் உளுந்து ஆகியவை காணப்பட்டுள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

திட்டமிட்ட குழுவொன்று அரிசி கொள்கலன்களுக்கு இடையே ஏனைய தானியங்களை அதிகளவில் இறக்குமதி செய்துள்ளது. இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட அரிசித் தொகை வர்த்தகர்கள் மூலம் மீளப் பொதியிடப்பட்டு அதிக விலைக்கு சந்தைக்கு வெளியிடப்பட்டு வருகின்றது. நாட்டில் அரிசி விநியோகத்தை அரசாங்கம் நிர்வகிக்கத் தவறிவிட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ரி.ஐ.டி...

பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் என்று அடையாளப்படுத்தி கடையைப் பூட்டிவிட்டு கடையில் இருந்தவர்களை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். இதையடுத்தே கடையில் வைக்கப்பட்டிருந்த 30 லட்சம் ரூபாவைக் கொள்ளையிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## விவசாயியின்...

முல்லைத்தீவு - மல்லாவி, கல்விளான் பகுதியில், வயல்வெளியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மல்லாவி - கல்விளான் பகுதியில் வயற்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவரின் மோட்டார்சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## ரூ.61 லட்சம்...

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 61 லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் உறவினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று அவர்கள் முற்படுத்தப்பட்ட நிலையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## அதானி...

அதானி நிறுவனத்தின் காற்றாலை மின்சாரத் திட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் இந்தியாவின் அதானி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலைத் திட்டத்தை வலுவற்றதாக்கக் கோரி இலங்கைப் பசுமை அமைப்பின் தலைவர் சந்திம அபயவர்த்தன இந்த மனுவைச் சமர்ப்பித்திருந்தார். மனு நேற்றையதினம் கேட்புக்கு உட்படுத்தப்பட்டபோதே மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)

## பருத்தித்துறைக்...

என்று உத்தரவிடப்பட்டுள்ளது. காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கரையோரக் காவற்படையின் வடக்குப் பிராந்தியப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் ஊடாக அனைத்துக் கடற்தொழில் சங்கங்களுக்கும் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார். (அ-ம-66)

## பொய்யான...

நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மைக்காலமாக அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டு வருகின்றது என பெரமுன குற்றஞ்சாட்டி வருகின்றது. இதனால், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் முறையிடுவதற்காக தனியான அலுவலகம் ஒன்றும் பெரமுனவால் அமைக்கப்பட்டு நேற்றுத்திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத் திறப்புவிழாவில் நேற்று உரையாற்றும்போதே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## போலியான...

செய்யப்பட்டுள்ளார். கனடாவிலிருந்து கடந்த தடவை இலங்கைக்கு வந்திருந்தபோது, பிறிதொருவரின் உதவியுடன் அவர் சாரதி அனுமதிக்கான தற்காலிக அனுமதிப்பத்திரத்தைப் பணம் செலுத்திப் பெற்றுள்ளார். இம்முறை மீண்டும் கனடாவிலிருந்து வந்துள்ள நிலையில் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்குச் சென்றபோதே அவர் ஏற்கனவே பெற்றிருந்த தற்காலிக அனுமதிப்பத்திரம் போலியானது என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## நெடுந்தீவில்...

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவில் நான்கு மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இரண்டு இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. இரண்டு இயந்திரங்கள் மட்டுமே தற்போது இயக்கப்படுகின்றன. இதனால், கடந்த இருவாரகாலமாக காலை 8 மணிமுதல் முற்பகல் 10:30 மணிவரையும், மாலை 2:30 மணிமுதல் மாலை 5:30 மணி வரையும் இரவு 1:30 மணிக்குப் பின்னரும் மின்சாரம் இடைநிறுத்தப்படுகின்றது. இதனால், பெரும் சிரமங்களை நாம் எதிர்கொள்கின்றோம். நெடுந்தீவில் இரவு நேரத்தில் நடமாடும் சுருட்டைப் பாம்புகள் காரணமாக உயிராபத்தோடு வாழும் நிலையில், மின்வெட்டு இந்த நிலைமையை மேலும் பாரதூரமாக்கியுள்ளது - என்றனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீட்டுப் பணியாளர் தேவை

யாழுப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை

தொடர்பு: 078 731 1049


# இந்திய மீனவர்களால் தொடர்கிறது அட்டூழியம்

## வடமராட்சி மீனவர்கள் வேதனை



யாழ்ப்பாணம், ஜன.17

**இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீன்வர்களால் பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகள் அறுத்தெறிந்து அழிக்கப்பட்டுள்ளன என்று வடமராட்சிப் பிரதேச மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

ஆட்சிகள் மாறினாலும் இந்திய மீனவர்களது எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை தடையின்றி தொடர்ந்து வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரும் எண்ணிக்கையான இந்திய இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி யில் ஈடுபட்ட நிலையில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை உள்ளிட்ட வடராட்சியைச் சேர்ந்த பலரது மீன்பிடி வலைகள் அறுத்து அழித்துவிட்டுச் சென்றன.

குறித்த வலைகள் மீளப் பயன்படுத்த முடியாத நிலையில் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து மீன்பிடி நடவடிக்கையினை முன்னெடுத்து வரும் நிலையில் இந்திய இழுவைப்படகுகளால் ஏற்படுத்தப் பட்டுவரும் இவ்வாறானஇழப்புகள் மீளமுடியாத பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துகின்றன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-100)

## தவறவிடப்பட்டுள்ளது

12.01.2025 ஞாயிற்றுக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் சிவபாதசுந்தரம் பிரகாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (821753775V), சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வருமானவரிப்பத்திரம், Atm காட் என்பன தவறவிடப்பட்டுள்ளன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்

**077 127 8122** (CS 2294) P-1


மீண்டும் யாழ் மண்ணில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

| | | |
|---|---|---|
| Physics | T.சம்பந்தன் B.Sc PGDE | A/L 2025,2026 Day Class |
| Chemistry | சு.சுரேஸ்குமார் B.Sc PGDE | ஆரம்பம் |
| Com.Maths | A.பத்மநாதன் B.Sc | JAN 18 சனிக்கிழமை |
| Biology | R.குகாநந்தன் B.Sc PGDE MED | 9.00a.m |

நீரு கல்வி நிலையம்
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்
077 787 2903 | 077 555 9028 | 077 691 1696 | 077 796 0138


## 31ம் நினைவுநாள் அழைப்பு



அன்னை மடியில் : 30.10.1946 மரி அன்னை மடியில் : 14.12.2024

அன்புடையீர்!

**கடந்த 14.12.2024 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையார்**

### அமரர் சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா

**(நெல்லியடி மொடோர்ன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

அவர்களின் 31ம் நாள் நினைவுதினம் நாளை 18.01.2025 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கரவெட்டி புனித பரலோகமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் பின்பு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**உச்சிலம்மன் கோவிலடி,**
**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**

நன்றி

*பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1951



உதிர்வு 15 . 01 . 2025

### திருமதி ஸ்ரீகமலாதேவி கைலாசபதி

வண்ணார்பண்ணை கிழக்கு, சீனியர் லேன், கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகமலாதேவி கைலாசபதி நேற்றுமுன்தினம் (15.01.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், கைலாசபதி (பதியண்ணை, சண்முகா ஜூவல்லரி) அவர்களின் ஆருயிர் மனைவியும், பாலமயூரன், பிரதீபா, கிரிஷாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குருதாரணி, கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லிகிதன், அதிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற ஸ்ரீலங்காதேவி மற்றும் ஸ்ரீஇந்திராதேவி, ஸ்ரீசுசிலாதேவி, விவேகானந்தன், சகுந்தலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரியும், கலைமகள், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற நாமகள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சீனியர் லேன், கலட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**49/8, சீனியர் லேன்,**
**கலட்டி.**

**தகவல் : குடும்பத்தினர்**
தொடர்புகளுக்கு :
+447 540 898 240
+94(0) 773 644 385
+94(0) 772 002 424

(Cs 57219 N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org